**<u>மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>**

**இ.பி.எண்.19/2023 இன் ஏ.ஆர்.பி.246/2017** **நாள்.23.02.2026**

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள்ராஜ் | தொழில் | |
| த. பெ./க.பெ. | காசிராஜா | சாதி | |
| கிராமம் | திண்டிவனம் சாலை | மதம் | இந்து |
| வட்டம் | செஞ்சி | வயது | 49 |

**<u>ம.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நிறைவேற்று மனுவில் 1-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் என்றால் அவர் இறந்துவிட்டார். நிறைவேற்று மனுவை 21.11.2022 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் 08.01.2022 அன்று இறந்துவிட்டார் என்றால் தேதி தெரியாது. 1-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டாலும் அவரது வாரிசுகள் அந்த கடனுக்கு பொறுப்பு என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் தான் விண்ணப்பம் செய்து கடன் பெற்றவர் என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் எவ்வளவு தொகையை வாங்கினார் என்றோ எவ்வளவு தொகையை திருப்பி செலுத்தியுள்ளார் என்ற விபரத்தை அசல் வழக்கிலோ, நிறைவேற்று மனுவிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் யாருக்கு கடன் கொடுத்தாலும் அவர்கள் பெயரில் காப்பீடு பாலிசி எடுப்போம் என்றால் 2015 பிறகு அந்த நடைமுறை வந்தது. 2006 ம் ஆண்டில் இருந்தே அந்த நடைமுறை உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இறந்தாலும் அவரது காப்பீட்டு பாலிசி அடிப்படையில் எங்களுக்கு சேர வேண்டி தொகையை சமன் செய்து கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இறந்து 10 மாதங்கள் கழித்து வேண்டும்மென்றே இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இறந்தால் அவரது வாரிசுகளை இந்த மனுவில் தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும்மென்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரிடம் வற்புறுத்தி

கையெழுத்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் கடனாளி அல்ல என்றால் ஜாமீன் கையெழுத்து போட்டவர் தான். கடன் தொகையில் 1 ரூபாய் கூட 2 ம்எ திர்மனுதாரர் அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். எனவே 1ம் எதிர்மனுதாரரை தவிர்த்து தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எந்த முகவரியில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் மாதம் 20 ஆயிரம் சம்பாதிப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மொத்த தொகையையும் செலுத்திவிட்ட பிறகும் அவரது வாகனத்தை ஏலம்விட்ட பிறகும் அதை மறைத்து 2 ம் எதிர்மனுதாரர் பெயரில் தவறாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாங்கிய தொகையில் இருந்து 3 மடங்கு அதிகமாக தொகை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ரிசர்வ் வங்கி வழிகாட்டுதலுக்கு மாறாக வட்டி விகிதம் கோரியுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை இந்த வழக்கு கடனில் இருந்து விடுவிக்கவேண்டும் என்றால் சரியல்ல.